IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 72/2023

Deposition of Witness : PW 1

Name : பாஞ்சாலையம்மாள் (வயது – 65)

Father's Name /W/o : க/பெ சுப்பிரமணி

Religion : இந்து

Calling : –

Address : பள்ளிப்பட்டு

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 24.03.2026.

## குறுக்கு விசாரணை

1. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் வீட்டில் தகராறு செய்தார்கள் அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் நான் வாங்கிய சொத்து. தாவா சொத்து முதலில் என் தாயார் தனபாக்கியத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் முதூரில் உள்ளது. சர்வே எண் என்னவென்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் என்றால் தெரியாது.

2. என் தாயார் உயிருடன் உள்ளாரா அல்லது இறந்துவிட்டாரா என்றால் இறந்துவிட்டார். என் தாயாருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் நான், சிவலிங்கம், ராமலிங்கம், சொக்கலிங்கம் வாரிசுகள் ஆவோம். சிவலிங்கம் தற்போது உயிருடன் உள்ளரா என்றால் உள்ளார். சிவலிங்கத்திற்கு எத்தனை பெயர் வாரிசுகள் என்றால் 3 பேர் வாரிசுகள். வாரிசுகள் யார் என்றால் சிவபாதம், பாக்கியராஜ் மற்றும் சகுந்தலா வாரிசுகள் ஆவார். ராமலிங்கம் இறந்துவிட்டரா என்றால் ஆம். ராமலிங்கத்திற்கு யார் வாரிசுகள் என்றால் வெங்கடேசன்,

சின்னபொன்னு வாரிசுகள் ஆவார்கள்.

3. சிவலிங்கத்தின் மனைவி உயிருடன் உள்ளாரா என்றால் ஆம். ராமலிங்கத்தின் மனைவி இந்திராணி உயிருடன் உள்ளரா என்றால் ஆம். மேற்படி சிவலிங்கம் மற்றும் ராமலிங்கம் மனைவியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சிவலிங்கம் மற்றும் ராமலிங்கத்தின் மனைவிகளை இவ்வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் என்றாலும் அவர்களை சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**